# திருமணம்

திருமணம் என்பது பூலோகத்தில் நிச்சயிக்கப்படுவது அல்ல அவை சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும். திருமணத்தில் இரு வேறு மனங்கள் ஒருசேர சங்கமித்து, இரு உடல் ஓர் உயிராக உருப்பெறுவதே திருமணம் ஆகும்.

ஒருவர் திருமணத்தின் மூலம் தங்களது வம்சத்தை விருத்தி செய்வது மட்டுமின்றி தங்களுடன் இருக்கக்கூடிய துணையையும், நம்பிக்கையையும் வாழ்நாள் முழுக்க தேர்ந்தெடுப்பதாகும்.

திருமணம் என்பது ஒருவரின் வாழ்நாளில் மிகப்பெரிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு புதிய அத்தியாயம் கூட. ஏனெனில் இதுவரை நமக்கு தொடர்பு இல்லாத ஒரு நபருடன் நமது வாழ்நாளில் மீதி இருக்கக்கூடிய நாட்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

நம் துணையுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து நமது தலைமுறையையும் விருத்தி செய்கின்றோம். அவ்வாறு இருக்கையில் நமது வாழ்க்கையின் சரிபாதியை பகிர்ந்து கொள்ளக்கூடியவர்களின் தன்மைகளை அறிந்து அதற்கு தகுந்தாற்போல் நாமும் சில மாற்றங்களை நம் வாழ்வில் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

திருமணத்தில் இருமனங்கள் ஒன்றிணைந்து மாற்றங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் இருவருக்கும் சுபிட்சமான மணவாழ்க்கையானது தேனின் சுவையில் மதி மயங்கி நிற்கும் வண்டினை போன்ற ஒரு இன்பமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க கூடியதாகும்.

நமது வாழ்நாளில் நடைபெற இருக்கும் பல மகிழ்ச்சிகளுக்கும், இன்னல்களுக்கும் காரணம் நாம் தேர்ந்தெடுக்கும் துணையே ஆகும். நமது துணை என்பது இந்த ஜென்மத்தில் நிர்ணயிக்கப்பட்டது அல்ல. நம் முன்னோர்கள் கூறியது போல நமது துணைவியார் என்பது சென்ற ஜென்மத்தில் நாம் செய்த கர்ம வினைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆகும். ஏனென்றால் திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் ஆகும்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இத்திருமணத்தில் இன்றைய நடைமுறையில் பலவிதமான மாற்றங்கள், ஏற்ற இறக்கங்கள் என அனைத்தையும் நம் கண்முன்னே பல நபர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் உணர்ந்து கொண்டு இருக்கின்றோம்.

திருமணம் என்பது இன்பம் அளிக்கக்கூடிய இனிப்பாக இருந்தாலும் அவை தெகட்டும் அளவிற்கு இருத்தல் என்பது ஆகாது. ஆகவே, எதுவும் அளவோடு இருப்பது மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாகும். அமிர்தம் ஆனாலும் அதை அளவுடன் சாப்பிட்டால் மட்டுமே மருந்தாக இருக்கும். அதுவே அளவுக்கு மீறினால் அமிர்தமும் விஷமாகக்கூடும் என்பதை மறத்தல் கூடாது.

எனவே, திருமணம் செய்யும்போது நமது துணைவியாரின் ஜாதகத்தையும், நமது ஜாதகத்தையும் இணைத்து கிரக அமைப்புகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பது நமது வாழ்க்கையின் எதிர்காலத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

திருமணத்தின் மூலம் இரு மனங்கள் ஒன்றிணைந்து பெரியோர்கள், சான்றோர்கள் ஆசிகளைப் பெற்று, சமுதாயத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குகின்றனர்.

இரு உடல்கள் சங்கமித்து புதிதாக ஒரு ஜனனத்தை அனைவரின் ஆசிகளுடனும் உருவாக்கக்கூடியதுதான் இந்த திருமணம்.

இந்த திருமணத்தின் மூலமாக கணவன் தனது குடும்பம் மற்றும் தன்னை நாடி வந்தவர்களின் தேவைகளை நிறைவேறும் பொருட்டு தனது செயல்பாடுகளை செய்ய துவங்குகின்றார். மனைவியும் கணவனின் தேவைகளையும், குடும்ப நபர்களின் விருப்பங்களையும் அறிந்து நிறைவேற்றி, இதுவரை இருந்து வந்த வாழ்க்கையிலிருந்து புதியதொரு அத்தியாயத்தை தொடங்குகிறாள்.

திருமணத்தின் போது என்னுள் பாதி நீ, உன்னுள் பாதி நான்... உன் சுக, துக்கங்கள் அனைத்திலும் நான் பங்கு கொள்வேன் எனும் உறுதிமொழியினை தனது துணைக்கு இருவரும் தருகின்றனர். அதுபோல வாழ்வின் இறுதிவரை இருவரும் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு தங்களது வாழ்வை முன்னேற்றி கொண்டு செல்லவேண்டும்.

திருமண வாழ்வில் வம்சவிருத்தி மட்டும் முக்கியமில்லாமல் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாகவும், எந்நிலையிலும் எந்த சூழலிலும் உதவக்கூடியவராகவும் விளங்க வேண்டும்.

திருமணத்தின் மூலம் தனக்கு நிகராக தனது துணையை ஒருவருக்கொருவர் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். அவ்விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுபவர் தனது

துணையான அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உரிய நேரத்தில் அளித்து மகிழ்விப்பது என்பது அவரின் கடமையாகும்.

ஒருவரின் முகத்தில் காணும் மகிழ்ச்சியை கொண்டு இன்னொருவர் மகிழ்ச்சி அடைவது இந்த திருமண பந்தத்தில் தான்.

## திருமணத்தின் வகைகள்

### 1. **நிச்சய விவாகம் அல்லது பிராம்ஹ விவாகம் :**

மணமகன் - மணமகள் குடும்பத்தினர் ஜோதிடரிடம் சென்று மனமக்களின் ஜாதகத்தை ஆய்வு செய்து முறைப்படி இருவீட்டாரின் ஆசிர்வாதங்களுடன் இருமனம் இணைவதாகும். நடைமுறையில் அதிகம் பயன்படும் முறையும் இதுவே ஆகும்.

### **2. காந்தர்வ விவாகம் :**

காந்தர்வ விவாகம் என்பது பழங்காலத்திலிருந்து இன்றைய நவீன காலம் வரை தொடர்ந்து கொண்டேதான் உள்ளது.

காந்தர்வ விவாகம் என்பது இன்றைய சூழலில் காணப்படும் காதல் திருமணம் ஆகும். ஒரு ஆணும், பெண்ணும் மனதால் ஈர்க்கப்பட்டு தங்கள் வாழ்க்கையை தங்களுக்குள் பேசி முடிவு செய்து திருமணம் செய்து கொள்வதாகும்.

### **3. கர்ப்ப நிச்சிதம் :**

மிகவும் நெருங்கிய உறவினர்களோ அல்லது நண்பர்களோ அவர்களது துணைவியார் கர்ப்பத்தில் உள்ளபோது ஆண் - பெண்ணாக பிறக்கும் பட்சத்தில் இருவரையும் வாழ்க்கை பந்தத்தில் இணைத்து திருமணம் செய்து வைக்கலாம் என்று பேசி முடிவெடுத்துக்கொண்டு அதன்படி செய்வது கர்ப்ப நிச்சிதமாகும்.

## 4. குரு - தெய்வ விவாகம் :

குரு போன்ற ஸ்தானத்தில் உள்ளவரை ஆண் - பெண் பெற்றவர்கள் சந்தித்து ஆசி பெறச் செல்லும்போது அவர் வாக்கின் மூலம் ஆண் - பெண் ஆகிய இருவரையும் திருமண பந்தத்தில் ஈடுபடுத்துமாறு கூறி ஆசி அளிப்பது குரு நிச்சிதமாகும்.

தெய்வ சந்நிதியிலோ, ஹோமம் யாகம் - திருவிழா போன்றவற்றிலோ ஆண் - பெண் பெற்ற இருவர் சந்தித்து பரஸ்பரம் விசாரிப்பில் இருவரையும் வாழ்க்கையில் இணைக்க திருமணம் செய்ய முடிவெடுத்து அதன்படி செய்வது தெய்வ விவாகமாகும்.

## 5. சகுன - நிமித்திக விவாகம் :

ஜோதிடரிடம் சகுனம் அல்லது நிமித்திகம் கேட்க ஆண் - பெண் பெற்ற இருவர் எதிர்பாராத விதமாக சந்திக்கும்போது அங்கே சகுனம் அல்லது நிமித்திக அடிப்படையில் ஜோதிடர் கூறியோ அல்லது இவர்கள் இருவராகவோ பேசி முடிவெடுத்து திருமணம் செய்வது அல்லது ஏதோ வேலை காரணமாக ஒருவர் வீட்டுக்கு செல்லும்போது அங்கே திருமணத்துக்கு தயாராக உள்ள ஆண் அல்லது பெண்ணைப் பார்க்கும்போது சகுனம் சரியாகவிருந்து அதன் அடிப்படையில் பரஸ்பரம் பேசி முடிவு செய்து திருமணம் நடத்துவது சகுன - நிமித்திக விவாகமாகும்.

## 6. சுயம்வா விவாகம் :

பண்டைய காலத்தில் அரசு குலப்பெண் தனக்குரிய மணவாளனை தானே தேர்வு செய்து கொள்ள, அரச குமாரர்களை அழைத்து ஒரு மண்டபத்தில் நிறுத்தி மணமாலையுடன் வரும் பெண், தனக்கு விருப்பமான அரசகுமாரனுக்கு மாலையிட்டு மணவாளனாக ஏற்றுக்கொள்வது சுயம்வா விவாகம் ஆகும்.

## 7. அசுர விவாகம் :

பெண்ணின் விருப்பமோ, பெண்ணின் பெற்றோரின் விருப்பம் இல்லாமலோ பலவந்தமாக திருமணம் செய்து கொள்வது அசுர விவாகம் ஆகும்.

## 8. பைசாச விவாதம் :

தனியாக உள்ள பெண்ணிடம் பொய் சொல்லி நயவஞ்சகமாக ஆசை வார்த்தைக்கூறி அவளை ஏமாற்றி, சில பிரச்சனைகளுக்காக விட்டு சென்றுவிட்டு, அதன் பின் பஞ்சாயத்து கட்டுப்பாட்டிற்காக ஒப்புக்கு திருமணம் செய்து கொள்வது பைசாச விவாகமாகும்.

## 9. ஆதர்ஷ விவாகம் :

திருமணத்திற்கு தகுதியுள்ள பெண்ணுக்கு வரும் வரனுக்கு அந்த கன்னிகையான பெண்ணையும், இரு பசுக்களை தானம் செய்து கொடுப்பதும், தகுதியான பெண்ணின் பெற்றோர்களுக்கு சீதனமாக பொருள், பசு, ஆடு, மாடு போன்றவைகளைக் கொடுத்து அவர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்வது ஆதர்ஷ விவாகமாகும்.

# திருமண சடங்குகள்

திருமணம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் திருமணத்தில் செய்யப்படும் சடங்குகளும் இன்றியமையாதது ஆகும்.

திருமண சடங்குகளில் செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களுக்கும் வலுவான காரணங்கள் உண்டு.

திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி நல்வேளையில் தாலி கட்டுதலாகும். இதனை 'மாங்கல்ய தாரணம்' எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் 'சுமங்கலி' அதாவது திருமணமானவள் என்ற தகுதி பெறுகின்றாள்.

திருமண சடங்கில் அக்னி வளர்ப்பது, திருமணம் முடித்து கொள்ளும் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும், அன்யோன்யமாகவும் இருப்போம். உன்னை அறியாமல் நானும், என்னை அறியாமல் நீயும் தவறுகள் செய்தால் இந்த நெருப்பு நம் இருவரையும் சுடட்டும் என்பதாகும்.

இதுபோல் திருமணத்தின்போது பல சடங்குகள் பின்பற்றப்பட்டு வருகிறது. அவற்றில் சில,

- வாழைமரம் கட்டுதல்
- பந்தகால் நடுவது

- நலுங்கு வைத்தல்
- பொன்னுருக்குதல்
- தாரை வார்த்தல்
- தாலி கட்டுவது
- ஹோமம் வளர்த்தல்
- கும்பம் வைத்தல்
- அம்மி மிதித்தல்
- அருந்ததி பார்த்தல்
- மறுவீடு அழைத்தல்
- கோவிலுக்கு அழைத்துச் செல்லுதல்

என ஒவ்வொரு சடங்குகளுக்கு பின்னும் ஏதாவதொரு காரணம் ஒளிந்துள்ளது. திருமணத்தின்போது சடங்குகள் செய்தால் போதுமா? இந்த சடங்குகளை ஏன்? எதற்காக செய்கிறோம்? என்பதை தெரிந்துகொள்ள வேண்டாமா?

## பெண் பார்க்கும் படலம் முதல் திருமணம் வரை!

ஒரு குடும்பத்தில் திருமணத்திற்கு முன்பு உள்ள சம்பிரதாயங்களான பெண் பார்க்கும் படலம் முதல் திருமணம் வரை நல்ல நாட்களில் நடைபெறுவது என்பது சாஸ்திர சம்பிரதாயங்களில் சொல்லப்பட்ட ஒரு பழமையான தகவல்கள் ஆகும்.

## திருமணப் பொருத்தம் :

திருமணம் செய்வதற்கு பெண் மற்றும் ஆண் இருபாலருக்கும் வயது மட்டுமில்லாமல், திருமணத்திற்கு உண்டான மன வளர்ச்சி மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

இருவீட்டார் பெற்றோர்களின் மனம் தெளிவாகவும், சுற்றுச்சூழல் அமைதியாகவும் இருக்கும் ஒரு நாளில் ஜோதிடரை பார்த்து திருமணம் செய்யவுள்ள இருவரின் ஜாதக பொருத்தம் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

## பெண் பார்க்கும் படலம் :

மணமக்களின் தாரபலம், திருமணம் போன்ற சுபகாரியத்துக்குரிய நட்சத்திரங்கள் உள்ள நாளில் ராகு காலம், எமகண்டம் போன்ற நேரங்களை தவிர்த்து நல்ல நேரங்களில் பெண் பார்க்க செல்ல வேண்டும்.

## நிச்சயதார்த்தம் :

நிச்சயதார்த்தம் செய்யும் நாளானது துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி, அசுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களும், கேந்திர கோணங்களில் பாவக் கிரகங்கள் இல்லாத லக்னமாக அமைய வேண்டும்.

## திருமாங்கல்யம் செய்ய ஏற்ற நாள் :

அசுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திராடம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களிலும் துவிதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகளிலும் ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் இரண்டாமிடம் சுத்தமான லக்னமும் உள்ள நாட்கள் ஏற்றவை.

## பந்தக்கால் நடுவதற்கு ஏற்ற நாள் :

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திங்கள், ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி, அசுவினி, ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை,

சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்கள் உள்ள நாட்கள் ஏற்றவை. 1,4,7,10 ஆம் இடங்களான கேந்திர கோணங்களில் பாவக் கிரகங்கள் இல்லாத சுப லக்னத்தை தேர்ந்தெடுத்து செய்தல் வேண்டும்.

**திருமணம் :**

அசுவினி, புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம், சதயம், ரோகிணி, மிருகசீரிடம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களும், துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளும் ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம் ஆகிய லக்னங்கள் ஏற்றவை.

## திருமண அழைப்பிதழ்களை தாம்பூலத்தட்டுகளில் வைத்துக்கொடுப்பது ஏன்?

திருமண வாழ்க்கை என்பது அன்பு, உதவி, அரவணைப்பு, ஆறுதல், நம்பிக்கை போன்ற பல பகுதிகள் இணைந்ததாகும். இந்த திருமண வாழ்க்கையில் ஒன்றாக இணையப்போகும் மணமக்களின் திருமணத்திற்கு வருகை புரியுமாறு நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் சுற்றத்தில் உள்ள அனைவருக்கும் வேண்டுகோள்விடுக்கும் ஒரு அழைப்பு கடிதம் தான் திருமண அழைப்பிதழ் ஆகும்.

சாதி, மத வேறுபாடின்றி அனைத்து சமூகத்தினராலும் கடைபிடிக்கக்கூடிய ஒரு திருமணச் சடங்காக திருமண அழைப்பிதழ் வழங்குவது நடைமுறையில் இருந்து வருகிறது. ஒவ்வொருவரும், தங்களுடைய வசதிக்கு ஏற்றவாறு திருமண அழைப்பிதழை வடிவமைத்து வழங்குவார்கள்.

அவ்வாறு திருமண அழைப்பிதழை வடிவமைத்து, திருமண அழைப்பிதழை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் சுற்றத்தில் உள்ள அனைவருக்கும் வழங்கும்போது வெறும் திருமண அழைப்பிதழ் மட்டுமல்லாமல், வெற்றிலை, பாக்கு, பூ, குங்குமம் உள்ளிட்டவைகளையும் வழங்கும் பழக்கம் ஒரு சிலரிடம் இருக்கிறது.

சிலரிடம் திருமண அழைப்பிதழுடன் நாணயம் ஒன்றையும் இணைத்து வழங்கும் பழக்கம் உள்ளது. அவ்வாறு திருமண அழைப்பிதழ் கொடுக்கும்போது திருமண அழைப்பிதழ்களை

கையில் கொடுக்காமல் தாம்பூலத் தட்டுகளில் வைத்துக் கொடுப்பதற்கான காரணம் என்னவென்று பார்ப்போம்.

உதாரணமாக, ஒரு சிலர் திருமண அழைப்பிதழ்களை மட்டுமல்ல, ஏதேனும் ஒரு பொருளை கடனாக கொடுக்கும்போதும் கூட தட்டில் வைத்துதான் கொடுப்பார்கள். அதேபோல் ஒருவர் மற்றொருவருக்கு அரிசி, நெல் முதலானவற்றை கொடுக்கும்போது முறத்தில் வைத்துதான் கொடுப்பார்கள்.
இவ்வாறு கொடுப்பவரும், வாங்குபவரும் பொருளாதார அளவில் உயர்ந்த நிலையில் இருந்தாலும், தாழ்ந்த நிலையில் இருந்தாலும் வேற்றுமை மனதிலில்லை என்பதை காட்டுவற்காகவே அவ்வாறு தட்டில் வைத்துக் கொடுத்தனர்.

மேலும் ஒரு பொருளைக் கொடுக்கும்போது வெறும் கையால் கொடுத்தால், கொடுப்பவரின் கை மேலேயும், வாங்குபவரின் கை கீழேயும் இருக்கும். இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் இருவருடைய மனதிற்குள்ளும் தோன்றக்கூடாது என்பதற்காகவே எப்பொருளை கொடுத்தாலும், நம் முன்னோர்கள் தட்டில் வைத்துக் கொடுப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இதன் காரணமாகத்தான் திருமண அழைப்பிதழ் கொடுக்கும்போது அழைப்பிதழை தாம்பூலத்தட்டில் வைத்துக் கொடுக்கின்றனர். மேலும், திருமண அழைப்பிதழ் தாம்பூல தட்டில் வைத்துக் கொடுக்கப்போகும்போது, அதனுடன் வெற்றிலை, பாக்கு, பூ மற்றும் குங்குமம் உள்ளிட்டவற்றை வைத்து வழங்குவது சிறப்பாகும்.

## திருமணத்தில் பட்டுப்புடவைதான் உடுத்த வேண்டுமா?

நமது கலாச்சாரத்தில் இன்றும் கடைபிடிக்கப்படுவது திருமணத்தின்போது மணமகன் வீட்டார் மணமகளுக்கு கூறைப்புடவையை அளிக்கின்றனர்.

திருமணங்களில் திருமாங்கல்ய தாரணம் செய்யும் முன்பு மணமகன் வீட்டார் மணமகளுக்கு கூறைப்புடவை அளிக்கின்றனர். அதை மணமகள் உடுத்திக் கொள்வதற்கு உதவும் உரிமைகள் அனைத்தும் மணமகனின் சகோதரிக்கு மட்டுமே தர வேண்டும் என சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஏன் என்றால் மணமகனான, தன் சகோதரன் இல்லற சுகங்களைத் துய்த்து மகிழ இந்த மணமகள் ஏற்றவள்தான் என்பதை அவ்வேளையில் உறுதி செய்துகொள்ளவே மணமகனின் சகோதரிக்கு சாஸ்திரம் வழங்குகிறது.

இந்த முகூர்த்தப்புடவை, கூறைப்புடவை என்றும் அழைக்கப்படும். அப்படிப்பட்ட இந்த முகூர்த்தப்புடவையை திருமணம் முடிந்த பின், விவாஹ மந்திரத்தின் பொருளும், மகிமையும் அறிந்த ஒருவருக்கு தானமாக அளித்துவிட வேண்டும் என்று சொல்லியுள்ளனர். ஆனால், இந்த முறையை தமிழகத்தில் எவரும் கடைபிடிக்கப்படுவதில்லை.

## திருமணத்தின்போது பட்டுப்புடவை தேவையா?

இன்றைய காலக்கட்டத்தில் மணமகன் வீட்டார் தங்கள் அந்தஸ்தை வெளிப்படுத்த முகூர்த்த புடவையாக மிக விலை உயர்ந்த பட்டுப்புடவையை வாங்குவதால், அதை தானமாக வழங்க மனம் இல்லாமல் போகிறது.

இந்த பட்டுப்புடவை தேவையா என்று யோசிக்கும்போது, பட்டுத்துணிகள் அனைத்தும் உயிர்வதையால் உண்டாக்கப்படுகிறது. மேலும், ரசாயன நூல்களாலான துணிகள் இயற்கைக்கும் உகந்தது அல்ல.

புதிதாக இல்லறத்தில் இணையும் தம்பதியின் முதல் நாளே இப்படிப்பட்ட பல ஜீவன்களை இம்சித்த பட்டுப்புடவை தேவையில்லையே. இயற்கையான பருத்தி நூலினாலான புடவையே சாஸ்திர சம்மதம். இப்படி சுத்தமான பருத்தி நூலால் நெய்யப்பட்ட புடவையை மஞ்சள் நீரில் நனைத்து உலர்த்தி மங்கலமாக்கி, அதை முகூர்த்தப் புடவையாக பயன்படுத்தும் மரபு இன்றும் பல கிராமங்களில் பின்பற்றப்படுகிறது.

### புடவையை தானம் செய்வதன் காரணம் :

திருமண நிகழ்ச்சியின்போது பலரும் மணமகளை, அவளது சிறப்பை பார்த்தவாறு அமர்ந்திருப்பர். அதனால் அவளின்மீது திருஷ்டி படிந்திருக்கும்.

ஆகையால், அனைவரும் தங்கள் திருமணத்தில் முகூர்த்தப் புடவையாக பருத்தியால் நெய்யப்பட்ட புடவையையே பயன்படுத்தி, அதை திருமணத்திற்கு பின் தானமும் செய்து, தம்பதிகளின் வாழ்வில் மேன்மையை அடையச்செய்வோம்.

## முகூர்த்தக்கால் ஊன்றுதல்

இல்லத்தில் திருமணம் நிச்சயக்கப்பட்ட நாள் முதல் திருமணம் முடியும் வரை பலவிதமான சடங்குகள் செய்கிறோம். இந்த சடங்குகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது முகூர்த்தக்கால் நடுதல் ஆகும். இதை பந்தக்கால் நடுதல் என்றும் கூறுவர். இந்த பந்தக்கால் நடும் விழா பிரம்ம முகூர்த்தம் அல்லது ஏதேனும் முகூர்த்த நாளில் நல்ல நேரம் பார்த்து திருமணத்திற்கு முன்பு நடைபெறும்.

இந்த சடங்கில் தனித்தனியே மணமகன் மற்றும் மணமகள் வீட்டில் வடகிழக்கு பகுதியில் பந்தக்கால் ஒன்று நடப்படும். இந்த பந்தக்கால் நடும் விழாவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது கல்யாண முருங்கை மரம் ஆகும். சில வீடுகளில் கல்யாண முருங்கைக்கு பதிலாக பால மரமும் நடுகின்றனர்.

## பந்தக்கால் நடும் முறை

கல்யாண முருங்கை மரத்தில் ஒரு கிளையை வெட்டி அதில் உள்ள இலைகளை அகற்றிவிட்டு அந்த மரத்தின் நுனியில் 5 மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி, இடையில் ஒரு மஞ்சள் பூசிய வெள்ளைத் துணியில் ஒரு செப்புக்காசு முடிந்து கட்டிவிட வேண்டும்.

உறவினர்கள் அனைவரையும் அழைத்து வீட்டில் உள்ள பெரியவர் அந்த மரத்தை நட வேண்டிய இடத்தில் வைத்து, பின் அதற்கு தேங்காய் உடைத்து சாம்பிராணி கற்பூரம் காட்டி பூஜை செய்ய வேண்டும். அதனடியில் நவதானியத்தோடு நீர் மற்றும் பால் ஊற்றி மரத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் வைக்க வேண்டும்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை பாக்கு மற்றும் பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தீபம் காட்டி பின் பந்தக்காலை நிலத்தில் ஊன்றுவர். பந்தக்கால் நட்ட பிறகு பந்தல் போடும் வேலையும் தொடர்ந்து செய்வர். பின் உறவினர்களுடன் சேர்ந்து இருவீட்டாரும் அவரவர் வீட்டில் விருந்துண்டு மகிழ்வர்.

முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இருவீட்டாரும் திருமணச் சடங்குகள் முடியும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்குபெறுதல் கூடாது.

## பந்தக்கால் நடும் முறை வந்தது எப்படி?

முற்காலத்தில் திருமணம் செய்யும்போது அரசனுக்கும் அழைப்பிதழ் அனுப்புவார்கள். அப்படி அழைப்பு தந்த அனைத்து திருமணத்திற்கும் அரசனால் செல்ல இயலாது. எனவே, அவர் தனது ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆணைக்கோல் மருவி அரசாணைக்கால் ஆகிவிட்டது. அன்று ஆணைக்கோல் வந்துவிட்டால் அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அத்திருமணம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. இதுவே இன்று திருமணப் பந்தலில் கல்யாண முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதனை வழிபடுகின்றனர்.

## பொன்னுருக்குதல்

திருமாங்கல்யம் என்பது சுமங்கலியின் ஓர் அடையாளம் ஆகும். அதை அவர்கள் எந்நாளும் போற்றி பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த திருமாங்கல்யம் நல்ல நாளில், தீர்க்க சுமங்கலியாக வாழ்வதற்கு மாப்பிள்ளை வீட்டில் வைத்து உரிய பொற்கொல்லரிடம் புதிய பொன் கொடுத்து திருமாங்கல்யம் செய்ய வேண்டும்.

## நிச்சயதார்த்தம் (கலப்பரப்பு)

திருமணத்தின் பொருட்டு மாப்பிள்ளை வீட்டார் கொடுக்கும் சேலையை தரையில் விரித்து மணப்பெண் அமர்ந்து மங்களப் பொருட்களை இருவீட்டாருக்கும் வழங்குவதன் மூலம் இக்கணம் முதல் இருவீட்டாரும் கலந்து ஒன்றாகி விட்டதற்கான அடையாள நிகழ்ச்சியாகும்.

அவ்விதம் கொடுக்கும் பாத்திரத்தில் மங்களப்பொருட்களை (மஞ்சள் கலவை, வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், பூச்சரம்) நிரப்புதல் கலப்பரப்பு ஆகும்.